RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s38

# கீதாரி நாவலில் ஆயர் இனக்குழுவின் வாழ்வியலும் சமூக மாற்றமும்

**இரா. விமலாதேவி** [அ, *]

[அ] முதுகலை தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Biological and Social Change of the Aayar Ethnic Group in the Keethari Novel

**R. Vimala Devi** [a, *]

[a] PG Tamil & Research Department, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: katturai100@gmail.com

Received: 30-03-2021
Revised: 19-04-2022
Accepted: 03-05-2022
Published: 16-06-2022

Check for updates

**ABSTRACT**

Novels are one of the mainstays of contemporary media documenting the biographies of soil-based peoples. Contemporary writers have documented people's lives, customs, rituals, values, in their novels with a contemporary character. The industrial revolution, the Green Revolution, the White Revolution, the deforestation for development projects, the occupation of agricultural lands, the loss of livelihoods to the people living in their respective areas as refugees, the loss of their own land due to land occupation. Their work records the changes in society during the respective eras, such as the transformation of wages into agricultural wages and the loss of livelihood and suicide. Sundara Ramasamy's Oru Puliyamarathin Kathai, Vairamuthu's Kallaikattu epic, work in novels that record the history of the community or a component of a race. S. Tamilchelvi has recorded the lives of the common people who migrate for their livelihood as sheep migrated for their livelihood as evidenced by Kovalan's complaint to chase the prey for livelihood through the sociological approach in the novel. The writers have written extensively on the unique cultural life style of the Mullai people, the people of Mullai land, from the Tolkappiyam to the novel literature up to today. The purpose of this article is to explore the impact of globalization, liberalism, capitalism, the astounding growth of consumer culture and natural disasters on the livestock breeding and availability of the ancient Aayar.

**Keywords:** Aayar, Keethari, Mullai, Contemporary writers, Tolkappiyam

## முன்னுரை

மக்கள் வாழ்ந்த நிலப்பகுதிகள் நில அமைப்பிற்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

குறிஞ்சியும் முல்லையும் வறட்சியான காலத்தில் பாலை நிலமாக மாறுகிறது. காடும் காடு சார்ந்த பகுதியில் வாழ்ந்த முல்லை நில மக்கள் புன்செய் விவசாயமும் ஆடு மாடு வளர்ப்பையும் தொழிலாகக் கொண்டிருந்தனர் (Puliyur Kesigan, 2017).

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்

ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"

ஆ காத்தல் தொழில் செய்பவர் ஆயர் எனவும், வேட்டையாடும் தொழில் செய்பவர் வேட்டுவர் எனவும் தொழிலால் வரும் பெயர் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது (Thamizhannal, 2017).

"உலகளாவிய நிலையில் பார்க்கும்போது ஆயர் வாழ்வு என்பது புதிய கற்காலத்திலேயே (கிமு 9000--6000) தோன்றிவிட்டது. பெரும்பாலும் புதிய கற்காலத்திற்குப் பின்னரும் கூட கால்நடை வளர்ப்பு என்பது ஆயர் நாடோடியமாகவே (pastoral nomadism) காணப்பட்டது. (ஆல்சின்1963) தென்னிந்தியாவில் புதிய கற்கால கால்நடை வளர்த்தவர்கள் (neolithic cattle keepers of south india 1963) எனும் நாவலில் குறிப்பிடப்படும் தென்னிந்திய அகழ்வாய்வுச் சான்றுகளைப் பார்க்கும்போது கிமு 2000 வாக்கிலிருந்து கிமு 700 வரையிலும் கால்நடை வளர்த்தவர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. தக்காணத்து ஆயர்கள் கிமு 4000 வாக்கில் கால்நடை மேய்ச்சலுக்காகச் சென்ற வழிகள் பின்னாளில் பெருவழிகளாக உருவாயின. அகநானூறு (14, 64, 74) பாடல்களில் கால்நடை மேய்த்தவர்களின் புலப் பெயர்வுகள் பின்னாளில் பெருவழிகளாகமாறின என்பதை உறுதி செய்கின்றன" (Allchin, 1963; Bhakthavatsala Bharathim 2014).

"நிலம் சாரந்த இனக்குழு வாழ்க்கையின் எச்சங்களை முல்லைத்திணையின் முதல், கருப்பொருள்கள் என இலக்கண மரபு வகுத்துள்ளவற்றைக் கொண்டு மீட்டுருவாக்கலாம். புறவு, வன்புலம், முல்லைநிலம் எனக்குறிக்கப்பட்ட சொற்களால்வானம் பார்த்த பூமி பரப்பில் கால்நடைகளை மேய்த்து பாதுகாத்து அவற்றிலிருந்து பெற்ற பால்படு பொருள்களை உண்டும் பண்டமாற்றுச் செய்தும் வாழ்ந்த குடியினர் கோவலர், ஆயர், அண்டர், இடையர் எனப்பட்டனர். சமவெளிக் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் இவர்களது வாழ்க்கைக்கு உகந்ததாக இருந்தது" (Raj Gauthaman, 2006).

## நாவல் சுருக்கம்

யாரோ ஒருவரால் வஞ்சிக்கப்பட்டு மனநிலை பிறழ்ந்து திரிந்த பெண்ணுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் கரிச்சாவும் சிவப்பியும்.அவர்களில் ஒருவரான பண்ணையார் சிவப்பியை எடுத்து வளர்க்க கீதாரி ராமு கரிச்சாவை வளர்க்கிறார். கரிச்சாவை தன் உறவினரான வளர்ப்புப் பையன் வெள்ளைச்சாமிக்குத் திருமணம் செய்து வைக்கிறார். சிவப்பி எடுத்து வளர்த்த பண்ணையாரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு தற்கொலை செய்து கொள்கிறாள். திருமணம் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்காததால் கணவனின் வெறுப்புக்கு உள்ளாகிறாள் கரிச்சா. கணவனைப் பிரிந்து தன் வளர்ப்புத் தந்தையான ராமுவிடம் வந்து சேர்கிறாள். அந்நிலையில் தான் கர்ப்பமாக இருப்பதை அறிந்து மகிழ்கிறாள். கணவனிடம் மீண்டும் செல்லாமல் குழந்தையை வளர்க்கும் கரிச்சா ஒருநாள் விஷக்கடியால் இறந்துவிடுகிறாள். வயது முதிர்வாலும் போதிய வருமானம் இல்லாமல் தவிக்கும் கீதாரிக்குக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பு வந்து சேர்கிறது.

## வாழ்வியல் நிகழ்வுகள்

கீதாரி என்னும் இந்நாவலில் ஆடுகள் கிடை போடுவதற்காக எப்பொழுதும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் குடிபெயரும் அலைகுடி மக்களின் அவலநிலை, தான் படும் துன்பத்திலிருந்து மீள வழி தெரியாத மக்கள், வறுமையிலும் வரதட்சனை கேட்கும் அவலம், பாலியல் வன்முறை, விதவை மறுமணம், மூடநம்பிக்கை, குழந்தை பிறக்கவில்லை என்பதற்காக மறுமணம் செய்ய விரும்பும் கணவன், தன் உழைப்பில் நம்பிக்கை வைத்து கணவனைப் பிரியும் மனைவி என உழைக்கும் மக்களின் வாழ்வைப் பதிவு செய்யும் இந்நாவலில் இவர்களின் வாழ்க்கை நிலையான இடத்தை அடைய முடியாமைக்குக் காரணங்களாக அவர்களின் உழைப்பை ஏமாற்றும் முதலாளித்துவம், ஆடுகள் திருடப்படுவது வறட்சி, மேய்ச்சல் நிலமின்மை, ஆடுகள் தண்ணீரின்றித் தவிப்பது, இரசாயன உரங்களின் பயன்பாடு, ஆடுகள் நோயினால் மொத்தமாக இறப்பது (படுசாவு),

வெள்ளப்பெருக்கு போன்ற காரணங்களால் ஆடு கிடை போடும் தொழில் அழிவுக்கு உள்ளாகும் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது (Tamilselvi, 2015).

## ஆடு கிடை போடுதல்

வயல்களில் இயற்கையான உரம் பெற குறிப்பிட்ட எண்ணிக்கையிலான செம்மறி ஆடுகளை மூங்கில் தடுப்புகள் அல்லது இரும்பு வேலிகள் (பட்டி) கொண்டு இரவு முழுவதும் அடைத்து வைத்து ஆடுகளின் புழுக்கை மற்றும் சிறுநீரை உரமாக பெறுவது. அதற்கானக் கூலியை கிடை போடுபவர் பெற்றுக்கொள்வார். இது வயலில் கதிர் அறுப்புக்கு பின் அடுத்த விளைச்சலுக்கு மண்ணைத் தயார்படுத்த நடைபெறும் செயல்.

## கீதாரி

ஆடு கிடை போடுபவர்களின் தலைவர். அறுவடை முடிந்த வயல்களில் உள்ள உரிமையாளரிடம் பேசி கிடை போட அனுமதி பெறுவார். கிடைபோட்ட பின் கிடைக்கும் பணத்தை உரிமையாளருக்கு ஆடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரித்து அளிப்பார். கிடை போட வேண்டிய இடங்களையும், நாட்களையும் முடிவு செய்து கிடை போடுபவர்களுக்குத் தெரிவிப்பார். கிடை போடுபவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்பவராக விளங்குவார் (Tamilselvi, 2017).

## கிடைபோடுதலின்சூழலியல் நன்மைகள்

ஆடு கிடை போட செம்மறி ஆடுகளையே அதிகம் பயன்படுத்துவர் ஏனெனில் செம்மறி ஆடுகள் மந்தைதன்மை உடையவை. தனியாக பிரிந்து செல்லாது.மேய்ச்சல் எளிது ஆனால் செம்மறி ஆடுகளுக்குச் சென்ற வழியில் மீண்டும் வரத்தெரியாது. அவற்றிற்கு வழிகாட்டவே சில வெள்ளாடுகளை மந்தையுடன் சேர்த்து வைத்திருப்பர். விளைந்த வயல்களில் அடுத்த வருடம் பயிர் செய்யும் முன் மண் இழந்த சத்துக்களை மீட்க இயற்கை உரம்பெற ஒரு ஏக்கர் நிலத்துக்கு 2000 ஆடுகளை ஒரு நாள் இரவு முழுவதும் பட்டிகளில் அடைத்து கிடைபோடுவர். ஆட்டின்சிறுநீர் மற்றும் புழுக்கையில் இருக்கும் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், சுண்ணாம்புசத்து, நுண்ணூட்டச் சத்துக்களின் காரணமாக வயலுக்குத் தேவையான சத்துக்களை மண் மீண்டும் பெறுகிறது.

கிடை கட்டுதலில் கிடைக்கும் உரம் இயற்கை உரமாக இருப்பதால் சுற்றுச்சூழலுக்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படுத்துவதில்லை.செலவு குறைவு. விளையும் உணவுப்பொருட்களில் நச்சு வேதிப் பொருட்களின் பாதிப்பு இல்லை. குறைந்த விலையில் மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் எவ்வகையிலும் தீங்கு தருவதில்லை.சிறுநீரில் இருக்கும் வேதிப்பொருள்கள் வயல்களில் இருக்கும் களைகளை அழித்து விடுவதால் களைகள் வளர்வது குறையும். கிடை போட்டால் அந்த ஆண்டே பலன் போன்ற காரணங்களால் தென்தமிழகத்தில் ஆடுகிடை போடுதல் ஆயர்குல மக்களின் வாழ்வாதாரமாக தொடர்ச்சியாக இன்றுவரை இருந்து வருகிறது.

## சூழல் மாற்றம்

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நம்முடைய பயன்பாட்டுக்காக ஏற்படுத்தும் மாற்றங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சுற்றுச்சூழலைப்பாதிப்பதோடு அதன் காரணமாக மறைமுகமாக மனித குலமே பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறது. காடு கொன்று நாடாக்குதலே முதல் சுற்றுச்சூழல் அழிவு. மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உணவுத் தேவையும் அதிகரித்தது. அத்தேவையை பூர்த்தி செய்ய வீரிய ஒட்டு விதைகள், மேம்பட்ட உரவகைகள், நீர்ப்பாசன வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றின் ஒருங்கிணைந்த பயன்பாட்டால் உணவு பொருள் உற்பத்தி தன்னிறைவு பெற்றது.அதிக உணவுப் பொருள் உற்பத்திக்காக நாம் பயன்படுத்திய பூச்சிக் கொல்லிகள், உரங்களில் உள்ள வேதிப்பொருட்கள் மண்ணின் தரத்தைப்பாதித்ததோடு அதனை உண்ட நம் உடலிலும் புற்றுநோய் போன்ற பல நோய்கள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

## கிடைபோடுதலை பாதிக்கும் காரணிகள்

உலகமயம், தாராளமயம், நுகர்வுப் பண்பாட்டின் அசுரத்தனமான வளர்ச்சி போன்றவை ஆடு கிடைபோடுதலை கொஞ்சம் கொஞ்சமாக அழிவுக்கு உள்ளாக்கின. மேலும் முதலாளித்துவம், வறட்சி, மேய்ச்சலுக்கு நிலமின்மை, மழை பொழியாமல் ஆடுகளுக்குத் தேவையான இலை தழைகள் இல்லாமை, குளம் குட்டைகளில் நீர் இன்மை, ஆழ்துளை கிணறுகளின் வழி விவசாயம் நிகழ்வதால் குளம் குட்டைகள் பராமரிப்பின்றி தூர்ந்துபோதல், வெள்ளப்பெருக்கு காரணமாக ஆடுகளை அடைத்து வைக்க இடமின்மை, நோய்த்தொற்றின் காரணமாக ஆடுகள் மொத்தமாக இறத்தல், ஆடுகளைக் களவு செய்பவர்களால் ஏற்படும் இழப்பு, வேதி உரங்களின் பயன்பாடு காரணமாக கிடைபோடுதலை விரும்பாமை போன்ற காரணங்களால் கிடை போடுதல் என்னும் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக அழிவுக்கு உள்ளாகி முற்றிலும் அழியும் நிலையில் உள்ளது.

## முதலாளித்துவம்

உலகமயம், தாராளமயப் போக்குகளால் நிலங்கள் பெருமுதலாளிகள் வசமாயின. அவர்களை நம்பி தொழில் செய்வோரை ஏமாற்றும் போக்கும் காலம் தோறும் தொடர்கின்றன அவ்வகையில் ஆடு கிடை போடச் சொல்லிவிட்டு கிடைபோட்டபின் அதற்குரிய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றும் எதேச்சதிகார போக்கினால் கிடை போடும் கீதாரிகள் தங்கள் வருமானத்தை இழக்கின்றனர்.

“எங்ககெடக்கூலிய குடுத்துருங்கண்ணா”, “யோவ்கெடக் கூலி கெடக்கூலிங்குறே ஒங்க ஆடுங்க அத்தனையும் எங்கய்யா மேஞ்சிச்சி? எங்க ஊருல எங்க கொல்லையில கெடக்கிற பில்லதான மேஞ்சிச்சி? எங்க கொல்ல பில்லயே மேஞ்சிட்டு எங்க கொல்லையில போடுற புளுக்கக்கி நாங்க எதுக்கய்யா பணம் குடுக்கணும் என அவர்களை மிரட்டும் முதலாளித்துவம் (Tamilselvi, 2017).

## மேய்ச்சல் நிலமின்மை

மழை பொழிந்து விவசாயம் ஆரம்பித்துவிட்டால் கிடை போடவும் ஆடுகள் மேயவும் இடம் இன்மையால் கடற்கரை பகுதிகளுக்கோ காடுகளுக்கோ சென்று விடுவர். மழைக்காலம் முடிந்து அறுவடை ஆகும்வரை தொழிலின்றி ஆடுகளை பாதுகாப்பார்கள்.

“ஆடி மாதத்தில் ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டால் ஆடுமேய்க்கும் கீதாரி களுக்கு ஊர்களில் ஆடு மேய்க்க முடியாமல் போய்விடும். வயல்காடு கோட்டகமெங்கும் நடவு நட்டு விடுவார்கள். ஆடுகளை மேயக்கவும்பட்டி போடவும் இடமில்லாமல் போய்விடும். மழை நாட்களில் தண்ணீர் எல்லா இடங்களிலும் தேங்கி நிற்பதால் ஆடுகளுக்குக் கால்களில் புண்ணும் மற்ற நோய்களும் எளிதாகத் தொற்றும்” (Tamilselvi, 2017).

## வறட்சி, திருட்டு

சுற்றுச்சூழல் பாதிப்புகளும் இயற்கை பேரிடர்களும்விவசாயத்தை கடுமையாகப் பாதிப்பது போல விவசாயம் சார்ந்த கால்நடை வளர்ப்பையும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

“இஞ்ச இனிமே தங்கி பொளக்கவும் முடியாபோலருக்கு முன்மேரியா வெளயுது கோட்டவமெல்லாம் ஆத்துல ஒளுங்கா தண்ணி வராம வெவசாயமே கெட்டுகிட்டு வருது அங்க ஆடுகள வச்சி வரவு செலவு பண்ண முடியாடா களவு திருட்டு அதியமா இருக்கும்“. ஆட்டைத் திருடுபவர்கள் சரியான நேரம் பார்த்து சாமர்த்தியமாக திருடி விடுவர் (Tamilselvi, 2017). இதற்காக கிடை போடுபவர்கள் இரவு முழுவதும் காவல் இருப்பார்கள். அசதியில் தூங்கினால் ஆடுகளை இழக்கநேரிடும்.

“ஆடு திருடும் சிலர் நீண்ட அகலமான பலகையை எடுத்து வந்து காரம்பத்தை மேல் போட்டு வழி செய்து ஒரே இரவில் ஒன்பது ஆடுகளையும் எட்டுகிடாய்களையும் தூக்கிச் சென்றுவிட்டனர். களவு கொடுத்த ஆட்டுக்காரர்களின் நிலை பரிதாபமாக இருந்தது (Tamilselvi, 2017).

கிடைகட்டும் தொழிலில் ஏற்பட்ட தொடர்ச்சியான இழப்புகளால் ஆடுகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. ஆடு கிடைக்கட்டும் தொழில் பாதிப்புக்கு உள்ளாகியது.

"கீதாரிகென்று அதிகமாய் ஆடுகள் இருக்கவில்லை அவருடைய மருமகனிடம் நின்ற 45 ஆடுகளை வைத்துக்கொண்டுதான் கிடைகட்டி குடும்பத்தை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். ஆடுகள் அதிகம் இல்லாததால் கிடை பணமும் சொற்பமாகவே கிடைத்தது. குடும்பத்தை ஓட்ட அவ்வப்போது குட்டிகளைப் பிடித்து விற்றுக் கொண்டிருந்தான் கீதாரியின் மருமகன்."

"யாம்மய குடும்பம் நொடிச்சிஒண்ணுமில்லாமபெயிட்டாயிபுள்ள குட்டிய வச்சுக்கிட்டு மயளும் மருமயனும் படுற செருமய கங்கொண்டு காண சயிக்கல" எனக் கூறுவதன் வழி அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் இன்றி வாடுவதை அறிய முடிகிறது (Tamilselvi, 2015).

## முடிவுரை

காடுகள் அழிவதன் காரணமாக ஏற்படும் புவி வெப்பமயமாதல், ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை, இயற்கை பேரிடர்கள், சுற்றுச்சூழல் பாதிப்புகளால் மனித சமூகம் சந்தித்த அவலங்கள் பல அவற்றுள் விவசாயமும் அதனைச் சார்ந்த கால்நடை தொழிலும் அழிவின் விளிம்புக்குச் சென்று விட்டன. ஆயர் கால்நடைத் தொழிலில் கால்நடை தொழிலாளிகளானஆயர்களுடைய வாழ்வியலும் அவர்களுடைய அடையாளங்களை அழிக்கின்ற சமூக மாற்றங்களும் மனித குலத்தைப் பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி கீதாரி நாவலில் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார்.

## References


Allchin, F.R., (1963) Neolithic Cattle-Keepers of South India: A Study of the Deccan Ashmounds, Cambridge University Press, Cambridge, United Kingdom.

Bhakthavatsala Bharathi, S., (2014) Ilakkiya Maanidaviyal, Adaiyalam Publications, Trichy, India

Puliyur Kesigan, (2017) Silapathikaram Thelivuraiyudan, Paari Nilayam, Chennai, India

Raj Gauthaman, (2006) Paatum Thogaiyum Tholkappiyamum Thamizhs Samuga Uruvakamum, Tamizhini Publications, Chennai, India

Tamilselvi, S., (2015) Keethari, New century Book house, 7th Edition, Chennai, India.

Tamilselvi, S., (2017) Keethari, New century Book house, 10th Edition, Chennai, India

Thamizhannal, (2017) Tholkappiyam-Moolamum-Karuthuraiyum, 5th Edition, Meenakshi Puthaka Nilayam, Madurai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License